மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டம் மேலையூர் கிராமத்தில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளின் நகர்வு பணிகளை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் மாவட்ட கழக செயலாளர், நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., குத்தாலம் க.அன்பழகன், ஏ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், எஸ்.ராஜகுமார் எம்.எல்.ஏ., எஸ்.செல்வமணி, மங்கை எம்.சங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

அமைச்சர் துரைமுருகன் தலைமை! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. நடத்தி வைக்கிறார்!

தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் மு.கோபி இல்ல மணவிழா!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – மா.சுப்பிரமணியன் – தா.மோ.அன்பரசன் – முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, அக்.26-

தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் மு.கோபி - கோ.ரமாதேவி ஆகியோரின் புதல்வி கோ.சாய்லட்சுமி என்கிற சாலினி - எம்.மனோஜ்ராஜ் ஆகியோரின் மணவிழா நாளை (27.10.2025 - திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு சென்னை, திருவொற்றியூர் சௌந்தரபாண்டியன் நகரில் உள்ள வி.கே.மகாலில் நடைபெறுகின்றது. அதனைத் தொடர்ந்து பகல் 12 மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியும் நடைபெறுகின்றது.

மண விழாவில் கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகிக்கிறார். திருமணத்தை கழக கொள்கை பரப்பு செயலாளர், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் ஜெகத்ரட்சகன் எம்.பி. நடத்தி வைக்கிறார்.

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன் மற்றும் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ., தயாநிதி மாறன் எம்.பி., காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி.,

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ரமேஷ் ராஜ், எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் தே.சிற்றரசு எம்.சி., டி.ஜெ.கோவிந்தராஜ் எம்.எல்.ஏ., எபினேசர் எம்.எல்.ஏ., தி.மு.தனியரசு எம்.சி., ஏ.வி.ஆறுமுகம் எம்.சி., அருள் தாஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., எழும்பூர் கோபிநாத் ஆகியோர் வரவேற்புப் பேசுகின்றனர்.

மணமக்களை டி.ஆர்.பாலு, அமைச்சர் கே.என்.நேரு, கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் ஐ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, அ.ராசா, அந்தியூர் செல்வராஜ் மற்றும் ஆர்.எஸ்.பாரதி, அன்பகம் கலை, ஆஸ்டின், தாயகம் கவி, பூச்சி முருகன், துறைமுகம் காஜா, பத்மநாபன், தனபால் உள்பட அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழக செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக சொற்பொழிவாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணியின் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படவுள்ள

நெல்லின் ஈரப்பதத்தை ஆய்வு செய்திட - ஒன்றிய அரசின் 3 குழுக்கள்!

பல்வேறு மாவட்டங்களில் நேரில் ஆய்வு!

சென்னை, அக்.26-

தமிழ்நாட்டில் நடப்பு 2025-2026 ஆம் ஆண்டிற்கான குறுவை பருவ நெல் கொள்முதல் செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் தொடங்கி 1,839 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பத அளவினை 17% லிருந்து 22% வரை அதிகரிக்க தமிழ்நாடு அரசால் கடந்த 19.10.2025 அன்று ஒன்றிய அரசிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது.

அதனை தொடந்து, ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படவுள்ள நெல்லின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்திட மூன்று நிபுணர் அடங்கிய குழுக்களை நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது. அந்நிபுணர் குழு நேற்று (25.10.2025) முதல் தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படவுள்ள நெல்லின் ஈரப்பதம் குறித்து மாவட்டந்தோறும் ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி முதல் குழு நேற்று (25.10.2025) செங்கல்பட்டு மாவட்டத்திலும், 26.10.2025 அன்று திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலும், இரண்டாவது குழு நேற்று (25.10.2025) தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களிலும், 26.10.2025 அன்று திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலும், 27.10.2025 அன்று கடலூர் மாவட்டத்திலும் மற்றும் மூன்றாவது குழு நேற்று (25.10.2025) திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும் 26.10.2025 அன்று மதுரை மற்றும் தேனி மாவட்டங்களிலும் ஆய்வு செய்ய உள்ளனர் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ரூ.2.55 கோடி மதிப்பீட்டில்

திருப்பத்தூர் நகராட்சி - 36வது வார்டில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி!

அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

திருப்பத்தூர், அக். 26-

திருப்பத்தூர் சட்டமன்றத்தொகுதி திருப்பத்தூர் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட 5 வார்டுகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டத்தின் வாயிலாக குடிநீர் வினியோகம் செய்திட அப்பகுதி மக்கள் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி அவர்களிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர். கடந்த ஆட்சிகாலத்தில் சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தும், கோரிக்கை கடிதம் வழங்கியும் கடந்த ஆட்சியாளர்கள் செவிசாய்க்கவில்லை தொடர்ந்து எல்லோருக்கும் எல்லாம் வழங்கும் கழக ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், நகர்புறவளர்ச்சித்துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து இப்பணிக்கு ஆவண செய்ய கோரிக்கை வைத்தார்கள் அதன் பலனாக, திருப்பத்தூர் 36வது வார்டு திருமால்நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல் நிலை நீர்தேக்க தொட்டி கலைநகர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்வாயிலாக ரூ.2 கோடி, குள்ளாச்சாரி வட்டத்தில் 1 லட்சம் லி கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி சிறப்பு நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் வாயிலாக ரூ.55 லட்சம் ஆக 2.55 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் விநியோக பைப்லைன்கள் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்து பணியாணை வழங்கப்பட்டு, மக்கள் பயன்பெறும் மேம்பாட்டு பணிக்கு அடிக்கல் நாட்டி அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையர் சாந்தி, நகராட்சி பொறியாளர் நக்கீரன் நகர செயலாளர் சு.ராசேந்திரன், சேர்மென் சங்கீதாவெங்கடேசன், முன்னாள் நகர மன்ற தலைவர் சு.அரசு, மன்ற உறுப்பினர்கள் வெற்றிக்கொண்டான், வக்கீல். ராஜா, ஆதிசிவம், சீனிவாசன் உள்ளிட்ட கழக முன்னோடிகள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நீண்ட நெடுநாள் கோரிக்கையை நிறைவேற்றிய கழக அரசிற்கும் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு அந்தந்த பகுதி மக்கள் மகிழ்வோடு நன்றி பாராட்டினார்கள்.

திருப்பத்தூர் நகராட்சி 36வது வார்டு திருமால்நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கலைநகர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்வாயிலாக ரூ.2கோடி, குள்ளாச்சாரி வட்டத்தில் 1லட்சம் லி கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி சிறப்பு நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் வாயிலாக ரூ.55 லட்சம் ஆக 2.55 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் விநியோக பைப்லைன்கள் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்து பணியாணை வழங்கப்பட்டு, மக்கள் பயன்பெறும் மேம்பாட்டு பணிக்கு அடிக்கல் நாட்டி அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி சுவாமி விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (25.10.2025) நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இணை இயக்குநர் மருத்துவம் மரு.எஸ்.பி.நந்தினி, மாவட்ட சுகாதார அலுவலர் (சேலம்) மரு.சௌண்டம்மாள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

17,593 நபர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு ஆலோசனை!

சேலம் மாவட்டத்தில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' சிறப்பு மருத்துவ முகாம்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சேலம், அக். 26-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி சுவாமி விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (25.10.2025) நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து அன்றையதினம் சேலம் மாநகராட்சி, மணக்காடு, காமராஜர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமானது தொடங்கி வைக்கப்பட்டது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட 12 மருத்துவ முகாம்களில் 7,944 ஆண்களும், 10,410 பெண்களும் என மொத்தம் 17,593 பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்று உள்ளனர். இதில் 14,491 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனையும், 12,257 நபர்களுக்கு இசிஜி பரிசோதனையும், 1,841 நபர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை, 1,984 நபர்களுக்கு எக்கோ பரிசோதனையும் மற்றும் 1,467 நபர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனையும், மேற்கொள்ளப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக நேற்று (25.10.2205) இச்சிறப்பு மருத்துவ முகாமானது காடையாம்பட்டி சுவாமி விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்படுகிறது. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படுகிறது.

மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவ துறைகள் சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக, சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொண்ட 5 மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் மருத்துவம் மரு.எஸ்.பி.நந்தினி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.சௌண்டம்மாள் (சேலம்), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியா மற்றும் ஆசிய சாதனைப் புத்தகத்தில்

புதுச்சேரி மாணவர் நூல் வெளியிட்டு சாதனை!

புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பாராட்டு!

புதுச்சேரி, அக். 26-

இந்தியா மற்றும் ஆசிய சாதனை புத்தகத்தில் நூல் ஒன்றை அறிமுகம் செய்து அந்நூலுக்கு "மகா வித்தகர்" பட்டம் பெற்ற புதுச்சேரி மாணவரை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா நேரில் சந்தித்து பாராட்டு தெரிவித்தார்.

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதி அரும்பார்த்தபுரம், ஜி.என். பாளையம் கிராமம், வள்ளியம்மை நகரில் வசிக்கும் பிஆர்டிசி ஓட்டுநர் சரவணன் என்பவரின் மகன் திவ்யேஷ் என்பவர் புதுச்சேரியில் உள்ள தனியார் பள்ளியில் 10-ஆம் வகுப்பு படிக்கிறார். அவர் ஆன்மிகம், மனித சிந்தனையின் பரிணாமம், மனித தத்துவம், சுதந்திர சிந்தனை, அரசியல் பார்வை, அமைதி, வாழ்வின் புதிய விழிப்புணர்வு போன்றவற்றை இன்றைய மாணவர் சமுதாயம் எளிதில் அறிந்து கொள்ளும் வகையிலும், இந்நூலை வாசகர்கள் எளிதில் படித்து பயன்பெறக்கூடிய நிலையிலும் "முடிசூடிய மனம்" (THE CROWNED MIND) எனும் ஆன்மீக நூலை ஆங்கிலத்தில் தயாரித்திருந்தார்

மனித ஆன்மாவின் உச்சக் குரலாக பார்க்கப்படும் இந்நூலின் தன்மையை உலகறியச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் "முடிசூடிய மனம்" எனும் நூலை அந்த மாணவர் இந்தியா மற்றும் ஆசியா புத்தகத்தில் இடம் பெறச் செய்துள்ளார். அதனை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் அந்நூலை தயாரித்த மாணவன் திவ்யேஷ் என்பரை இந்தியா மற்றும் ஆசியா புத்தக சாதனையில் அங்கீகரித்து ஆசிய அளவிலான "மகா வித்தகர்" (GRAND MASTER) பட்டம் வழங்கி கவுரவித்துள்ளது.

இந்நூல் அமேசான் நிறுவனம் மூலம் உலகறியச் சந்தைப்படுத்தப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இளம் வயதில் "மகா வித்தகர்" பட்டம் பெற்று புதுச்சேரிக்கு பெருமை சேர்த்துள்ள மாணவன் திவ்யேஷ் அவர்களை புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் இன்று நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது, பி.ஆர்.டி.சி. போக்குவரத்துக் கழக தொ.மு.ச. செயலாளர் ராஜேந்திரன், மாணவனின், தந்தை சரவணன், பாலகிருஷ்ணன், அய்யப்பன், வெங்கடாசலம் ஆகியோர் உடனிருந்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் ஒன்றியம், விருகாவூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் நேற்று (25.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பொதுமக்களிடம் உரையாற்றினார்கள், இந்த முகாமில் அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.